**PROCEEDINGS OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED PROJECT OF THE UNIT OF M/s. RED GRAVEL AND ORDINARY STONE QUARRY, OVER AN EXTENT OF 4.55.0 HA LOCATED IN S.F.NO: 295/2A, 295/2B, 295/2D, 238/1, 295/4C, 238/3A, 238/2 AND 238/3B, KEELARAMANADHI VILLAGE, KAMUTHI TALUK, RAMANATHAPURAM DISTRICT ON 07.01.2025 AT 10.30 A.M AT M/S. NATARAJAN VELAMMAL THIRUMANA MANDAPAM, LF ROAD, KAMUTHI, RAMANATHAPURAM DISTRICT.**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1. | Thiru. Govindarajalu | : | District Revenue Officer, Ramanathapuram. |
| 2. | Thiru. R. Dhilip Kumar | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Ramanathapuram. |
| 3. | Thiru.Kadher Mohideen | : | Tahsildar, Kamuthi, Ramanathapuram. |
| 4. | Thiru. Selvaraj | : | Executive officer, Kamuthi. |
| 5. | Thiru. K.Chandra Mohan | : | Block Development Officer (V.P), Kamuthi, Ramanathapuram District. |
| 6. | Project Proponent and public | : | 323 Nos (List enclosed) |

**WELCOME ADDRESSED BY DISTRICT ENVIRONMENTAL ENGINEER, TAMILNADU POLLUTION CONTROL BOARD, RAMANATHAPRUAM, THIRU. R. DHILIP KUMAR:**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Ramanathapuram welcomed the District Revenue Officer, Ramanathapuram and all general public who have attended the public hearing for the proposed project of the M/s.Red Gravel and Ordinary Stone Quarry, over an extent of 4.55.0Ha located in S.F.NO:295/2A, 295/2B, 295/2D, 238/1, 295/4C, 238/3A, 238/2 AND 238/3B, Keelaramanadhi Village, Kamuthi Taluk, Ramanathapuram District. The proposed project

is required to get Environmental Clearance (EC) from the Ministry of Environment, Forest and Climate Change (MoEF &CC), Government of India and also he requested the District Revenue Officer, Ramanathapuram to preside the Public Hearing.

**THE DISTRICT REVENUE OFFICER, RAMANATHAPURAM:**

In the Continuation District Revenue Officer, Ramanthapuram welcome the gathering, He said that the proposed gravel quarry project will be explained by the Project Proponent. All the opinion of the people will be recorded and send to the government. District Environmental Engineer, Tamilnadu pollution Control Board, Ramanathapuram asking the proponent to explain the project.

**PRESENTATION BY MR. M. KARTHIK,**

**ENVIRONMENTAL CONSULTANT:**

The project proponent welcomed the officials and the Public and started his speech. Through the Power Point Presentation. He explained about the quarry to extent of 4.55.0 hectare, attitude of 65m and project cost of 57 lakhs. Validity up to 5 years.

Further he said about the details of CSR fund of Rs.4.8 lakhs spend.

He showed the satellite pictures of proposed quarry and surrounding and he said the there is no agriculture activity around the proposed quarry.

He said that the environmental impact studies were conducted as per the government G.O.

Further guaranteed only 87 kg of explosives will be used per day and the village is 1Km away from the quarry. So, the vibration noise and-Particulate mat will not affect the village.

The views of the public attended the Public Hearing and the replies of the project proponent for their queries are detailed below.

**Mr. Chakarai Munyandi, Neeravi Karisalkulam:**

He said that by setting up this quarry, it will be convenient for building houses and carrying out construction work, so permission can be given for this quarry.

**Mr. Manivannan, Keelaramanadhi:**

He said that it should be ensured that there is not too much noise when blasting in the quarry

**Mrs. Jayakodi, UdaiyarKootam:**

There is work only when it rains in the village and therefore, he asked UdaiyarKootam to provide employment to the people of the village.

**Thiru. Govindarajalu, District Revenue Officer:**

The District Revenue Officer has asked the project partner to provide employment opportunities to the public as the demand of the public is towards employment.

**Project Partner:**

He said that there will be employment for the villagers near the quarry. Since no one came forward to comment on the project after this, the District Revenue Officer asked those who wanted to comment further. Even after this no one commented. At the end if anyone else wanted to report in writing, the District Environmental Engineer asked them to do so at the Ramanathapuram office and thanked everyone who attended the meeting.

No direct petitions received. The list of participants in the meeting, the video Pen drive recording of the meeting proceedings are sent along with this.

R. Philip kumar 10-1-25
**District Environmental Engineer,**
**TNPC Board, Ramanathapuram.**

10/1/25
**District Revenue Officer,**
**Ramanathapuram.**

**Mr. Sevaka Perumal, Keelaramanadhi:**

Will there be any impact by setting up this red gravel and ordinary stone quarry and will this quarry create employment for the people of Keelaramanadhi village? He also asked to be informed.

**Thiru. Govindarajalu, District Revenue Officer:**

The District Revenue Officer asked the stakeholders of the project to answer the questions of the public whether the construction of the quarry will affect it and whether it will create employment.

**Project Partner:**

He said that there is no possibility of any damage due to the quarry and villagers living near the quarry can work in the quarry. He also asked the District Revenue Officer to give the number of people who can work. Accordingly, direct employment will be provided to 36 people and indirect employment to 40 people, he said.

**Mr. Duraisingam, Neeravi Karisalkulam:**

Are the products produced from the quarry of good quality to the general public? explained.

**Mr. Jenardhanan Selvam, Koraipallam:**

He said that there are 10 families in Koraipallam village who are dependent on this employment, both educated and uneducated, and he made his request that should be set up to provide employment to more than 10 families.

**Mrs. Mayavathi, Keelaramanadhi:**

He said that the people of Keelaramanadhi village were suffering from lack of employment, so he asked them to create employment in quarry. He also informed that the construction of the quarry has not affected the village so far and that the quarry should operate without any harm in the future.

**திி/ள். சிவப்பு சரளை மற்றும் சாதாரண கல் குவாரி, 4.55 ஹெக்டர் பரப்பளவு, சர்வே எண்: 295/2A, 295/2B, 295/2D, 238/1, 295/4C, 238/3A, 238/2, மற்றும் 238/3B, கீழராமநதி கிராமம், கமுதி வட்டம், இராமநாதபுரம் மாவட்டத்தில் தொடங்கவுள்ள குவாரி தொடர்பாக 07.01.2025 முற்பகல் 10.30 மணியளவில் திி/ள். நடராஜன் வேலம்மாள் திருமண மண்டபம், LF ரோடு, கமுதி வட்டம், இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள்.**

பங்கேற்றோர்:

திருவாளர்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. கோவிந்தராஜலு, | : | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>இராமநாதபுரம். |
| 2. | திரு. R. திலிப் குமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்,<br>இராமநாதபுரம். |
| 3. | திரு. காதர் மொஹைதின் | : | வட்டாச்சியர் அலுவலர்,<br>கமுதி வட்டம்,<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| 4. | திரு. செல்வராஜ் | : | செயல் அலுவலர்,<br>கமுதி,<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| 5. | திரு. K. சந்திரமோகன் | : | வட்டார வளர்ச்சி அலுவலர்,<br>கமுதி ஊராட்சி ஒன்றியம்,<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| 6. | தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் | : | 323 எண்கள்<br>(விவரம் இணைக்கப்பட்டுள்ளது) |

திி/ள். சிவப்பு சரளை மற்றும் சாதாரண கல் குவாரி, 4.55 ஹெக்டர் பரப்பளவு, சர்வே எண்: 295/2A, 295/2B, 295/2D, 238/1, 295/4C, 238/3A, 238/2, மற்றும் 238/3B, கீழராமநதி கிராமம், கமுதி வட்டம், இராமநாதபுரம் மாவட்டம், மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்திலிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், இராமநாதபுரம் அவர்கள் வரவேற்றார். மேலும் தலைமை ஏற்று நடத்த மாவட்ட வருவாய் அலுவலரை கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து, திரு. கோவிந்தராஜலு, மாவட்ட வருவாய் அலுவலர், இராமநாதபுரம், அவர்கள் பொதுமக்கள் அனைவருக்கும் தனது வணக்கத்தினை தெரியப்படுத்திக்கொண்டார். திி/ள்.சிவப்பு சரளை மற்றும் சாதாரண கல் குவாரி, 4.55 ஹெக்டர் பரப்பளவில் அமையவிருக்கும், இத்திட்ட உரையானது தொழிற்சாலை பிரதிநிதிகளால் விளக்கப்படும், பொதுமக்களின் கருத்துக்கள் அனைத்தும் பதிவுசெய்யப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் எனக்கூறி பொது மக்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு கூறி கூட்டத்தை தொடங்கி வைத்தார்.

பின் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அவர்கள் இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதிகள் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் கருத்துக்களை பதிவு செய்யலாம் எனக்கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

தொடர்ந்து சுரங்கம் அமைவதற்கான விளக்கத்தினை திட்டத்தின் பங்குதாரர் திரு.மு.கார்த்திக் அவர்கள் முன்மொழிந்தார்.

தொடர்ந்து பேசிய அவர், கருத்துக்கேட்புக் கூட்டத்தில் ஆலோசனைகளை வழங்க வந்த பொது மக்களையும், மாவட்ட வருவாய் அலுவலர், இராமநாதபுரம் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், இராமநாதபுரம் அவர்களையும் வரவேற்று தனது உரையைத் தொடங்கினார்.

தனது விளக்கத்தினை வீடியோகிராபி மூலம் பொது மக்களுக்கு திரையில் காண்பித்த அவர், விண்ணப்பதாரர் பெயர், இந்த சுரங்க குத்தகை பரப்பளவு 4.55 ஹெக்டர் மற்றும் கடல் மட்டத்திற்கு மேல் சராசரியாக 65 மீட்டர் உயரம் என்றும் இதன் திட்ட செலவு சுமார் 57 இலட்சம் என்றும் குத்தகை காலம் 5 ஆண்டுகள் எனவும் கூறினார்.

மேலும், சுமார் 4.80 இலட்சம் சுற்றுச்சூழல் மேலாண்மை செலவு (EMP) என்றும் கார்ப்பரேட் சுற்றுச்சூழல் பொறுப்பு செலவு 2% அதாவது 1.14 இலட்சம் என்றும் கூறினார். சுரங்க உற்பத்தி 349421 கனமீட்டர் ஐந்து ஆண்டுகளுக்கு மற்றும் 68840 கனமீட்டர் சரளை இரண்டு ஆண்டுகளுக்கும் என்றும் தெரிவித்தார்.

பூமியின் செயற்கைக்கோள் புகைப்படத்தினை மேற்கோள் காட்டி கீழராமநதி கிராமத்தில் சாதாரண கல் மற்றும் சரளை குவாரி அமையும் இடத்தில் விவசாயம் நடைபெறவில்லை என கூறி, இதனால் எந்த வித பாதிப்பும் ஏற்படாது என்றும் கூறினார்.

தொடர்ந்து சுற்றுச்சூழல் பாதிப்பு சம்பந்தமாக, காற்று மாசுபடுதல், நீர் மாசுபடுதல், தண்ணீரின் தரம் மற்றும் மண் போன்ற அனைத்தையும் அரசாங்க கட்டளையின் படி விரிவான அறிக்கை அமைத்துள்ளோம் என்றும் தெரிவித்தார்.

ஒரு நாளைக்கு 87 கிலோ வெடி மட்டுமே பயன்படுத்தப்படும் என்றும், கிராமத்திலிருந்து ஒரு கிலோ மீட்டருக்கு தொலைவில் உள்ளதால் வெடிபொருள்கள் பயன்படுத்தும் போது ஏற்படும் அதிர்வுகள் சத்தம் மற்றும் தூசியால் பாதிப்பு ஏற்படாது என்றும் தெரிவித்தார்.

நீர்மட்டத்திற்கு மேலே மட்டுமே குவாரி, அதாவது 24 மீட்டர் ஆழத்திற்கு செயல்படுவதால் நீர் மட்டம் பாதிக்கப்படாது.

மேலும் டாக்டர். ஆ.செல்வகுமார் என்பவர் நடத்திய ஆய்வில் இந்த சுரங்கம் அமைவதற்கான அனைத்து சாத்தியக்கூறுகளையும் மேற்கோள் காட்டி, இந்த சுரங்கத்தினால் பொது மக்களுக்கு பாதிப்புகள் இல்லை என்று கூறினார்.

மேலும் விண்ணப்பதாரர் அவர்கள், கிராமங்களுக்கு கல்வி வசதிகள், விளையாட்டு உபகரணங்கள், பள்ளிகளுக்கு குடிநீர் போன்ற நலன்புரி வசதிகள், கிராமங்களுக்கு சாலை வசதிகள்

மற்றும் அருகிலுள்ள கிராமவாசிகளுக்கு வேலை வாய்ப்புகள் வழங்குவதன் மூலம் கிராமப்புற சமூக பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறார். இலாபத்தில் இருந்து 2.5% கூட்டாண்மை சமூகப் பொறுப்புத் திட்ட ஒதுக்கீடு செய்து தரப்படும் என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

இறுதியாக இக்குவாரி அமைவதன் மூலம் பொது மக்களுக்கு ஏற்படும் சந்தேகங்கள் மற்றும் அது தொடர்பாக இத்திட்டத்தின் பங்குதாரர் அளித்த விபரங்கள் பின்வருமாறு:

**திரு. சேவகப் பெருமாள், கீழராமநதி:**

இந்த சிவப்பு சரளை மற்றும் சாதாரண கல் குவாரி அமைப்பதன் மூலம் ஏதேனும் பாதிப்பு ஏற்படுமா என்றும், இக்குவாரி கீழராமநதி கிராம மக்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி தருமா? என்றும் தெரிவிக்குமாறு வினவினார்.

**திரு. கோவிந்தராஜலு, மாவட்ட வருவாய் அலுவலர்:**

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் திட்டத்தின் பங்குதாரரிடம் குவாரி அமைப்பதன் மூலம் பாதிப்பு ஏற்படுமா என்றும், வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தி தருவீர்களா? என்ற பொதுமக்களின் கேள்விக்கு பதில் கூறும்படி தெரிவித்தார்.

**திட்டத்தின் பங்குதாரர்:**

குவாரியினால் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இல்லை எனவும் குவாரிக்கு அருகில் வசிக்கும் கிராம மக்கள் குவாரியில் வேலை செய்யலாம் எனவும் தெரிவித்தார். மேலும் மாவட்ட வருவாய்துறை அலுவலர் எத்தனை பேர் வேலை செய்ய இயலும் என எண்ணிகையில் தெரிவிக்குமாறு கேட்டுகொண்டார். அதற்கிணங்க, 36 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், 40 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் அளிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

**திரு.துரைசிங்கம், நீராவி கரிசல்குளம்:**

குவாரியிலிருந்து உற்பத்தி செய்யும் பொருட்கள் பொது மக்களுக்கு தரமானதாக இருக்குமா? என்று வினவினார்.

**திரு. ஜெனார்தணன் செல்வம், கோரைப்பள்ளம்:**

கோரைப்பள்ளம் கிராமத்தில் படித்தவர்கள், படிக்காதவர்கள் என இந்த வேலைவாய்ப்பை நம்பி 10 குடும்பங்கள் இருப்பதாகவும், மேலும் 10 குடும்பங்களுக்கு அதிகமாக வேலைவாய்ப்பு தரும்படி இக்குவாரி அமையவேண்டும் என்று தனது கோரிக்கையை வைத்தார்.

**திருமதி. மாயாவதி, கீழராமநதி:**

கீழராமநதி கிராமத்தில் உள்ளவர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் சிரமப்படுவதாகவும், எனவே இக்குவாரியில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி தரும்படியும் கேட்டுக்கொண்டார். மேலும் இதுவரை இக்கிராமத்திற்கு குவாரி அமைப்பதனால் எவ்வித பாதிப்பும் இல்லை எனவும் இனிமேல் வரும் காலங்களிலும் எவ்வித பாதிப்பும் இல்லாமல் குவாரி செயல்பட வேண்டும் எனவும் தெரிவித்து கொண்டார்.

**திரு. சக்கரை முனியாண்டி, நீராவி கரிசல்குளம்:**

இக்குவாரி அமைப்பதனால் வீடுகட்டுவதற்கும், கட்டுமானப்பணிகள் மேற்கொள்வதற்கும் வசதியாக இருக்கும். எனவே இக்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என தெரிவித்தார்.

**திரு. மணிவண்ணன், கீழராமநதி:**

குவாரியில் வெடி வெடிக்கும் போது அதிக சத்தம் வராமல் பார்த்து கொள்ள வேண்டும் என தெரிவித்தார்

**திருமதி. ஜெயக்கொடி, உடையார்கூட்டம்:**

கிராமத்தில் மழை பெய்தால் மட்டுமே வேலை இருப்பதாகவும் எனவே, இக்குவாரியினால் உடையார்கூட்டம் கிராம மக்களுக்கு வேலைவாய்ப்புகளை அளிக்குமாறும் கேட்டு கொண்டார்.

**திரு. கோவிந்தராஜலு, மாவட்ட வருவாய் அலுவலர்:**

திட்டத்தின் பங்குதாரரிடம் பொது மக்கள் அனைவரின் கோரிக்கையும் வேலைவாய்ப்புகளை நோக்கியே இருக்கிறது என்றும், அவர்களுக்கு தகுதியான வேலைவாய்ப்புகளை அமைத்து தரும்படியும் மாவட்ட வருவாய் அலுவலர் கேட்டுக்கொண்டார்.

**திட்டத்தின் பங்குதாரர்:**

குவாரிக்கு அருகில் இருக்கும் கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு இருக்கும் என்று தெரிவித்தார்.

இதன் பின்பு இத்திட்டம் தொடர்பாக கருத்துக்கூற யாரும் முன்வராததால், மேலும் கருத்துக்களை தெரிவிக்க விரும்புவோர் தெரிவிக்கக்கோரி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் கேட்டுக்கொண்டார். இதன் பின்பும் யாரும் எவ்வித கருத்தும் தெரிவிக்கவில்லை. இறுதியில் வேறு எவறாவது எழுத்துப் பூர்வமாக தெரிவிக்க விரும்பினாலும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், இராமநாதபுரம் அலுவலகத்தில் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டு கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

நேரடியாக மனுக்கள் எதுவும் பெறப்படவில்லை. கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் மற்றும் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த வீடியோ குறுந்தகடு ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

R. Dhilip Kumar 10-1-25
**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**இராமநாதபுரம்**

10/1/25
**மாவட்ட வருவாய் அலுவலர்,**
**இராமநாதபுரம்**